# பொதுமக்களுக்கான அறிவித்தல்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக நிதித் தொழிலைக் கொண்டு நடாத்துதல் அல்லது வைப்புக்களை ஏற்றல்

### ஹெட்டி ஆரச்சிலாகே சஹான் அகலங்க (தே.அ.அ. இல. 951980234V)
### மற்றும்
### ஏதென்ஸ் இன்டர்நெஷனல் எடுகேஷன் சென்டர் (பிறைவெட்) லிமிடெட் (PV 00221899)

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் 42ஆம் பிரிவின் கீழ் மேலே குறிப்பிடப்பட்ட தனிப்பட்டவர் மற்றும் நிறுவனம் மீதான விசாரணையொன்றின் போது, சொல்லப்பட்ட சட்டத்தின் 44(1) பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளின் பிரகாரம், இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைப் பணிப்பாளர், பொலன்னறுவை, புதிய நகரம், 2ஆம் ஒழுங்கை, இல. 45/5ஏ, என்ற முகவரியில் வதிகின்ற ஹெட்டி ஆரச்சிலாகே சஹான் அகலங்க என்பவருக்கும் பொலன்னறுவை, புதிய நகரம், 2ஆம் ஒழுங்கை, இல. 45/5ஏ, என்ற முகவரியில் பதிவுசெய்யப்பட்ட ஏதென்ஸ் இன்டர்நெஷனல் எடுகேஷன் சென்டர் (பிறைவெட்) லிமிடெட்டிற்கும்,

அ. உடனடியாக நடைமுறைக்குவரும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை அத்துடன்/ அல்லது அத்தகைய வேறு சாதனங்களை கைச்சாத்திடுவதன் மூலம் எவையேனும் மேலும் நிதியங்களை ஏற்காமலிருப்பதற்கும் அத்துடன்/ அல்லது புதிய கடன்களை வழங்காதிருப்பதற்கும் அத்துடன்/ அல்லது புதிய முதலீடுகளை மேற்கொள்ளாதிருப்பதற்கும்;

ஆ. மேற்குறிப்பிடப்பட்ட தனியார் அத்துடன்/ அல்லது கம்பனி மூலம் உரிமையாக கொள்ளப்பட்ட சொத்துக்களை கையுதிர்காமல் அல்லது கைமாற்றாமல் இருப்பதற்கும்;

இ. மேற்குறிப்பிடப்பட்ட தனிப்பட்டவர் அத்துடன்/ அல்லது கம்பனி மூலம் உரிமையாகக் கொள்ளப்பட்ட கணக்குகள் அல்லது ஆதனங்கள் அல்லது முதலீடுகள் தொடர்பில் எவையேனும் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளாதிருப்பதற்கும்; அத்துடன்

ஈ. சொல்லப்பட்ட சட்டத்தில் வரையறைசெய்யப்பட்டவாறு வைப்புக்களை திரட்டாதிருப்பதற்கும்

அவர்களை தேவைப்படுத்துகின்ற கட்டளைகளை 2021.02.10 திகதியன்று வழங்கினார்.

மேற்குறித்த விசாரணை இன்னும் முன்னெடுக்கப்படுவதனால் இலங்கை மத்திய வங்கியின் கோரிக்கையின் பேரில் மேற்குறித்த தடைக் கட்டளைகளை 2021.07.16 திகதிவரை கொழும்பு மேல் நீதிமன்றம் நீடித்துள்ளது என பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

**பணிப்பாளர்**
**வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி.**

இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01

011-2477000, 011-2440330, 011-2330220 @ dsnbfi@cbsl.lk www.cbsl.gov.lk